முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

OS.NO. 83/2023 (வா.சா.1)

| | | |
|---|---|---|
| பெயர் | : | பவளக்கொடி |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |

2024ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09-ம் நாள் வெள்ளிக்கிழமை திரு.ஸ்வர்ணம் ஜே.நடராஜன்.எம்.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல்விசாரணை:**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். இந்த வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பில் 6 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். வா.சா.ஆ 1 வாதியும் , பிரதிவாதியும் காரைக்குடியில் வைத்து ஒரு கிரைய ஒப்பந்ததம் எழுதி பதிந்து கொண்ட கிரய ஒப்பந்த பத்திரம் , தேதி 14.03.2021, அசல், வா.சா.ஆ 2 தாவா 1–வது இலக்கச் சொத்தின் மூலப்பத்திரம் , தேதி 25.08.2010 ஜெராக்ஸ், வா.சா.ஆ 3 தாவா 2–வது லக்கச் சொத்தின் மூலப்பத்திரம் , தேதி 14.02.2005, ஜெராக்ஸ், வா.சா.ஆ 4 வாதி, பிரிதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு, தேதி 08.05.2023 உண்மை நகல், வா.சா.ஆ 5 வாதி, பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கான அஞ்சல் ரசீது, தேதி 08–05–2023 அசல், வா.சா.ஆ 6, வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல்.

**பிரதிவாதிதரப்பு குறுக்குவிசாரணை:**

எனது கணவர் பெயர் தனபாலன் அவருக்கும் பிரதிவாதி ஆரோக்கியசாமி என்பவருக்கும் வரவு செலவு மற்றும் பழக்கவழக்கம் உண்டு என்றால் சரிதான். எனக்கு தொழில் எதுவும் கிடையாது. விவசாயம் மட்டும் தான் 30 ஏக்கர் சொத்து உருவாட்டியில் அமைந்துள்ளது. அது நஞ்சையா புஞ்சையா என்று எனக்கு தெரியாது. தேவகோட்டை பாரதஸ்டேட் வங்கியிலும் தேவகோட்டை ராம்நகர் ஐஓபியிலும் எனக்கு கணக்குகள் உள்ளது. ஒருவருடத்தில் எனக்கு சுமார் 10லட்சம் ரூபாய் வருமானம் வரும். ஒரு ஏக்கரிலவ் சுமார் 40 மூட்டை விளைச்சல் வரும். நான் கூறுவது தவறு என்றும் ஒரு ஏக்கரில் 40 மூட்டைவிளைச்சல் வராது என்றால் தவறு. ஒரு ஏக்கர் விவசாயம்

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.08.13 10:05:42 +0530

செய்யும்போது எவ்வளவு வரவு வரும் எவ்வளவு செலவு வரும் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியர்த என்றால் தவறு. நஞ்சை நிலத்தில் மட்டுமே விவசாயம் செய்ய முடியும் என்றும் அவ்வாறு இருக்கும்போது புஞ்சை நிலத்தில் விவசாயம் செய்ய முடியாது என்றும் வழக்கிற்காக வருமானம் வரும ் என்று பொய்யா ககுறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. வருடத்திற்கு எவ்வளவு வருமானம் வருகிறது என நான் வருமான வரிகட்டுகிறேன் என்றால் அது பற்றி என் கணவருக்குதான் தெரியும் எனக்கு தெரியாது.

விவசாயம் தவிர என் பெயரில் ஜேசிபி வண்டி உள்ளது அதன் மூலம் எனக்கு வருமானம் வருகிறது. 2 ஜேசிபி வண்டிகள் உள்ளது. பிரதிவாதி ஆரோக்கியசாமி எனது கணவரிடம் கைமாற்று வாங்குவார் என்றால் சரியல்ல. வருவார் போவார் பழக்கம் மட்டுமே. 2021ம் ஆண்டு 40லட்சம் ரூபாய் நான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததை வருமான வரிதாக்கல் செய்துள்ளேன். அது சம்மந்தமான ஆவணம் வழக்கில் தாக்கல்செய்கிறேன். 40லட்ச ரூபாய் வருமானம் வருவதாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றும் அவ்வாறு வருமான வரி காட்டவில்லை என்றால் சரியல்ல.

நானும் எனது கணவரும் சேர்ந்து தான் என் முன்னிலையில் பிரதிவாதிக்கு பணம் தரப்பட்டது. 6 மாத காலம் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 6 மாதகாலத்திற்குள் கிரையம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் மதிப்பு பலகோடி இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முதல் நாள் நான் தாவா சொத்தை பார்த்துவிட்டு மறுநாள் நான் ஒப்பந்தம் போட்டேன். எவ்வளவு சதுரடி அந்த வீடு இருக்கும் என்பது குறித்த விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்து 10, 12 செண்டு இருக்கும். அதற்குள் 7, 8 வீடுகள் அமைந்துள்ளது. அவை ஓட்டுவீடுகள் தார்சு வீடுகள் ஆகும். 7, 8 பேரும் வாடகைக்கு அந்த வீடுகளில் குடியிருந்து வருகிறார்கள்.

அந்த வீட்டின் கதவிலக்கம் மற்றும் சர்வே எண் எனக்கு தெரியாது. அந்த ஒருமுறை மட்டுமே நான் அந்த வீட்டை சென்று பார்த்தேன். அந்த வீடு அமைந்துள்ள தெரு பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஒவ்வொரு வீடும் தனித்தனி கதவிலக்கங்கள் அந்த கதவிலக்கங்கள் எனக்கு தெரியாது. அந்த வீடுகளிலிருந்து பிரதிவாதிக்கு எவ்வளவு வாடகை வருகிறது எவ்வளவு அட்வான்ஸ் தரப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது.

தாவர் சொத்தின் சந்தை விலை எவ்வளவு என்று எனக்கு தெரியாது. வழிகாட்டு மதிப்பும் எவ்வளவு என்று நான் தெரிந்துகொள்ளவில்லை. ஒப்பந்தம் போட்டபிறகு நான் பிரதிவாதியை அனுகி பலமுறை கிரையம் பதிவு செய்து தர கேட்டேன். பாக்கி கிரைய தொகையை வங்கி கணக்கில் வைப்பீடு செய்யவில்லை என்றால் சரிதான். பாக்கி தொகை 4லட்சம் ரூபாய் தரவேண்டும் அந்த பாக்கி தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவேண்டும். பாக்கி கிரைய தொகையை பணமாக எடுத்துச்சென்று பிரதிவாதியை

அனுகி நேரடியாக கிரையம ் செய்து தர கோரினேனா என்றால ் பணம் தயாராக உள்ளது என்று மட்டுமே சொன்னேன். பணம் எடுத்து செல்லவில்லை. தாவா சொத்தின ் அசல் ஆவணங்களை நாங்கள் வாங்கி வரவுசெலவிற்காக வைத்துள்ளோம் என்றால் சரியல்ல.

பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு தாவா தாக்கல்செ சய்வதற்கு முன்பு அனுப்பினேன். அறிவிப்பு அனுப்பியபிறகு பிரதிவாதிக்கு பத்திரம் பதிய சொல்லி கேட்கவில்லை. ஒப்பந்தம் காலம் முடிந்த பின்னர் தான் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். 40லட்சம் தொகையை பிரதிவாதி வட்டியுடன் செலுத்தினால் நான் வாங்கிக்கொள்ள தயாரா என்றால் எனக்கு சொத்து தான் வேண்டும். சொத்து பலகோடி மதிப்பு பெறும் என்றும் ஒப்பந்தத்தை நிறைவேற்றும ் கடமை பிரதிவாதிக்கு கிடையாது என்றும் கடனுக்காக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால்சரியல்ல. கிரைய ஒப்பந்தம் பெயரளவில் எனது பெயரில் ஏற்படுததப்பட்டுள்ளது என்றும் கடனாக கொடுத்த பணம் எனது கணவருடையது ன்றும் அவர் தான் முன்னின்று இயக்கி வருகிறார் என்றால் சரியல்ல. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலநிர்ணயம் முடியவில்லை என்றாதல் ஒப்பந்தத்தை நிறைவேற்றும் கடமை பிரதிவாதிக்கு இல்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த பணத்தை மட்டுமே திருப்பி கேட்கமுடியும் என்றும் ஒப்பந்தத்தை நிறைவேற்ற கோர முடியாது என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.08.13 10:06:12 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை